ஞாயிறு வெளியீடு | ஆண்டுச் சந்தா ரூபா 5 தனிப் பிரதி 0—1—3 | இலங்கை 10 சதம் மலாய் நாடு 8 காசு | REGD. No. M. 4642

திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 13—10—46 | இதழ் 24

நியூரம்பர்க்!

———

லார்டுலாரன்ஸ், நியூரம்பர்க்கில் நடைபெற்ற ஜெர்மன்யுத்தக் குற்றவாளிகள்விசாரணைக் கோர்ட்டில், பிரிட்டிஷ்சர்க்காரால்நிய மிக்கப்பட்டஜட்ஜ்.

நியூரம்பர்க் விசாரணைமுடிந்து, கீழ்க்கண்ட தீர்ப்புதரப் பட்டது.

லார்டு லாரன்ஸ்

கோயரிங்—தூக்குத்தண்டனை
ரிப்பன்டிராப் ,,
கீட்டல் ,,
ரோசன்பர்க் ,,
காலட்டன்பிரன்னர் ,,
பிராங் ,,
பிரிக் ,,
ஸ்டீரீட்சர் ,,
ஹெஸ் — ஆயுள் தண்டனை
பங்க் ,,
ரீடர் ,,
ஸ்கிராட்ச் — 20 வருஷம்
ஸ்பியர் ,,
வான்நியூராத்—15 வருஷம்
டோனிட்ஸ்—10 வருஷம்

"தூக்குத்தண்டனை! ஆயுட்தண்டனை! இருபது வருஷம்! பத்து ஆண்டு!" என்று சர்வதேச கோர்ட், நாஜித்தலைவர்களைக் கூண்டில் நிறுத்திவைத்துத் தீர்ப்பளித்தது. போர்மூட்டிய தலைவர்கள் இது வரை, களத்திலே மாண்டதுண்டு, அல்லது சமாதானம் ஏற்பட்ட பிறகு, பல் எடுக்கப்பட்ட பாம்புகளானதுண்டு, கோர்ட்டிலே நிறுத்தித்தண்டிக்கப்பட்டதில்லை.

போரைத்தூண்டிய இவர்கள் மனிதனை மிருகத்தனமாகநடத் தினர் என்பது குற்றச்சாட்டு. சித்திரவதை, விஷமூட்டிக்கொல்லு தல், உயிருடன் கொளுத்துதல், பட்டினி போட்டுச்சாகடித்தல் போன்ற பலகொடுமைகளைச் செய்யத்திட்டமிட்டனர், செய்யத் தூண்டினர், உடந்தையாக இருந்தனர்என்பதுஇவர்கள்மீதுஇருந்த குற்றம். ஆதாரம் ஏராளமாக இருந்ததால் இவர்கள் தண்டிக்கப் பட்டனர்.

நாஜித்தலைவர்களின் கொடுமைக்குப்பலியானமக்கள்ஏராளம். பேல்சன் என்ற முகாமில்மட்டும் இவ்விதம் சித்திரவதைக்கு ஆளா னவர்களின் தொகை 60,000 பேர், ஆண் பெண் குழந்தைகள் உட்பட. இளமையும் எழிலும் மாய்க்கப்பட்டுச்சோகம்கக்கும்கண் களுடன், கவலைக்கோடு படிந்தமுகமுடைய கன்னியரைக் கண்ட னர் பெல்சனில்.

பெல்சன்

பெல்சன் முகாமில் நேசநாட்டினர் கண்ட கோரக்காட்சி தான், நாஜித்தலைவர்களைத் தோற்கடிப்பதுமட்டும் போதாது மானிடவர்க்கத்தைக் கொடுமைப்படுத்தியவர்களைத், தண்டித்தாக வேண்டும் என்று தீர்மானிக்கச்செய்தது. அதன்விளைவாகவே நியூ ரம்பர்க் கோர்ட், கடந்தபதினொரு மாதங்களாக நடைபெற்றது.

நாஜித்தலைவர்களுக்குக்கிடைத்த தண்டனையைக் கேட்டு, கொடுமை ஒழிந்ததுமட்டுமல்ல, கொடியரும் ஒழிந்தனர், இனிஇவ் விதமான கோரக்கொலைபாதகச் செயல்புரிய யாரும் கிளம்ப மாட்டார்கள், கோயரிங் பட்டபாடு அவர்களுக்கு எச்சரிக்கை யாக இருக்கும் என்றுஎண்ணிக் களிப்புடன் கூத்தாடுவோர் உளர் பல்வேறு நாடுகளில்.

களிப்பு

ஜெர்மனியிலேயேகூட, ஏராளமான மக்கள் தங்கள் நாடு சுகம் சீர் சுபீட்சம் செல்வம் செல்வாக்குயாவும் இழந்ததற்குக்

8-ம் பக்கம் பார்க்க

★ வான வீதியில்! ★

—(ㅇ)—

சிவில் விமானப்போக்குவரத்துக்காக, 19-கம்பெனிகள் உள்ளன — தனிப்பட்ட முதலாளிகளுடைய கம்பெனிகள். இவைகளுக்காக அனுமதிக்கப்பட்ட மூலதனம், 40-கோடிரூபாய். டாட்டா கம்பெனியாரும், டால்மியாகம்பெனியாரும், சிவில் விமானக்கம்பெனிகள் நடத்துகிறார்கள்.

கம்பெனிகளின் வருமானம் பெருகிக்கொண்டு வருகிறது— வளர்ச்சிமேலும் மேலும்உண்டு.

ஏன் இந்தக்கம்பெனிகள்தனி முதலாளிகளிடம் இருக்கவேண்டும்? சர்க்காரே, ஏற்று நடத்துவதுதானே நல்லது; இலாபகரமானது.

விமானப் போக்குவரத்துக்கும் வியாபார உலகுக்கும்,சூட்சமமான தொடர்பு உண்டல்லவா?

இன்று மாலைக்குள்கொழும்பு போயாகவேண்டும்—ஒரு வியாபார சம்பந்தமாக. போகாவிட்டால், பல இலட்சம் நஷ்டம். இப்படி ஒரு நிலைமை ஒருவியாபாரிக்கு ஏற்படலாம். வான வீதியில் சென்றாகவேண்டும். இந்த விமானத்தொழிலை வேறு வியாபாரிகளிடம் தந்திருக்கிறார்கள் — அவர்களில் யாருக்காகிலும், அவசரமாகக் கொழும்பு போயாகவேண்டிய வியாபாரத்திலே "தொடர்பு" என்று வைத்துக்கொள்வோம்; இடம் இல்லை விமானத்தில் என்று ஏற்பட்டுவிட்டால்............என்னகதி!

இந்தத்தொழிலை சர்க்காரே நடத்தினால், சகலருக்கும் வசதி சமமாகக்கிடைக்கும்; தொழிலில் வருகிற இலாபமும் தனிப்பட்ட முதலாளிக்குப் போகாமல், சர்க்காருக்குப் போகும்.

விமானத் தொழிலுக்காக, வெளியிலிருந்து, யந்திரமோ, நிபுணர்களோ, கொண்டுவரும் வசதி, தனிப்பட்ட ஆட்களுக்கு இருப்பதைவிட, சர்க்காருக்குத்தான் அதிகமாக இருக்க முடியும்.

இந்நிலையில், சர்க்காரல்லவா விமானப் போக்குவரத்துத் தொழிலை நடத்த வேண்டும். ஆனால் சர்க்கார் நடத்தவில்லை. 40-கோடி ரூபாய் மூலதனம் போட்டு, தனிப்பட்ட முதலாளிகள் 19-கம்பெனிகளை நடத்துகிறார்கள்!

"அக்ரமம் சார்! சர்க்கார் என்ன சொல்கிறது? ஏன்விமானத்தொழிலை ஏற்றுநடத்த வில்லையாம்" என்றுகேட்கிறீர்களா? "சர்க்கார், தற்போது இதுசாத்யமில்லை என்கிறது"

"சிரிக்க மாட்டார்களாசார்! சர்க்காருக்குச் சாத்யமில்லை; தனிப்பட்டவர்களுக்குச் சாத்யமாகிறது என்றால் வெட்கக்கேடாக இல்லையா?" என்று கேட்பீர்கள். நான் பேசவில்லை, இதோ, போக்குவரத்து மெம்பர் பேசுகிறார் கேளுங்கள்.

"இந்திய மூலதனத்தைக் கொண்டு இந்தியநிர்வாகத்தின் கீழ் இந்தியர்களுக்குப் பயிற்சியும் உத்யோகமும் கிடைக்கக் கூடிய சிவில் விமானத்தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது தான் இந்தியா கவர்மெண்டின் கொள்கை. தத்தம் மூலதனத்தைக் கொண்டு ஊனமில்லாத முறையில் நடத்தப்படும் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள தனிநபர் ஸ்தாபனங்களின் மூலம் விமானப் போக்குவரத்து ஏற்பாடுகளை அபிவிருத்தி செய்வது தான் சர்க்காரின் உத்தேசம். கம்பெனிகள் தாராளமாய்வியாபார ரீதியில் நடக்க வேண்டுமென்பது தான் நோக்கம்"

"நல்ல நோக்கம் சார், நோக்கம்! சுற்றி வளைத்துப்பேசி, என்ன சொல்கிறார்,தனிப்பட்டவர்கள் தான் கம்பெனிநடத்த வேண்டும் என்றுதானே சொல்கிறார். சரி! முதலாளித்துவம் நம்ம தலைமீது ஏறிப்பறக்கிறது. இதற்கு இவர் என்னவாம் போக்குவரத்து மெம்பர்—இப்படித்தான் பேசியாகவேண்டும் இந்த மெம்பர்களெல்லாம். என்ன மெம்பர்கள்இவர்களெல்லாம்—வெள்ளைக்காரன் பிடித்து வைத்த பொம்மைகள் தானே! ஏகாதிபத்யத்தின் ஆட்கள் — அவர்கள் வேறு எப்படிப்பேச முடியும். அந்த ஆசாமிபேர் என்னசார்" என்று கோபமும் வெறுப்பும் கலந்த குரலில்கேட்கிறீர்களா.

"போக்குவரத்து மெம்பரின் பெயர் சர். குருநாத் பேவூர்" என்று நான் கூறுகிறேன்; கோபம் அதிகரித்து "சார்! இந்தச் "சர்"கள் சர்க்கார் ஒழியட்டும், நம்மசர்க்கார் வரட்டும்; அப்போது பாருங்கள். சர்க்காரால் முடியவில்லை, அதனாலேதான் தனிப்பட்ட ஆட்களிடம் கம்பெனி நடத்தும் பொறுப்பு விடப்பட்டது என்று சாக்குப் போக்குக்கூறும் வேலை நடக்கிறதாபாரும். சர்க்காரின் தொழிலாக மாறும், பாரும். மேலும் ஜவர்லால் சோஷியலிஸ்டாக்கும்! அவர், இப்படி முதலாளித்தனம் வளரவிட மாட்டார். மண்டையில் அடித்து உட்கார வைப்பார்" என்று கூறுகிறீர்களா?

கூறுங்கள்! தாராளமாகச் சொல்லுங்கள் — ஆனால் இன்னும் ஒரு வார்த்தை சொல்கிறேன், கேளுங்கள். "விமானப் போக்குவரத்து ஸ்தாபனத்தைத் தேசீயமயமாக்கும் பிரச்னை பற்றிப் பத்திரிகைகளில் அதிக கிளர்ச்சி இருந்தது. சர்க்காரும் அதைப்பற்றி ஆலோசித்துவந்தனர். விமானப் போக்குவரத்து போர்டால் லைசென்சுகள் வழங்கப்பட்டுள்ள தனிப்பட்டவர் கம்பனிகள் உள்நாட்டு மார்க்கங்களை நடத்திவர அனுமதிப்பதுதான் சர்க்காரின் தற்போதைய கொள்கை. சர்க்கார் இம்முடிவுக்கு வந்ததற்கு விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளை நேரடியாய் மேற்கொள்ளுவதற்குத தக்கபடி சர்க்காரின் ஊழியப்பிரிவுகள் அவ்வளவு தூரம் முன்னேற்றம் எய்தவில்லை என்பது பெரிதும் காரணமாக இருந்தது"

"எவனாவது பழைய ஆசாமி பேசியிருப்பான். நம்மநேருசர்க்கார் என்ன சொல்கிறது என்று பொறுத்துப்பார்த்து விட்டுப் பேசுங்கள் சார்" என்றுஎன்னை இடைமறித்துப்பேசத் தோன்றும் உங்கட்கு.

மேலே நான் குறிப்பிட்டேனே, தனிப்பட்டவர்கள் தான் விமானத்தொழிலை நடத்த வேண்டும் என்பது சர்க்காரின் திட்டம் என்று, அதனைக்கூறினது யார் தெரியுமோ! அவரும் சர்க்காரின் போக்குவரத்து மெம்பர்தான்—சர். பேவூர் காலிசெய்த இடத்தில் இருப்பவர்—சையத் அலி ஜஹீர்

"அவருமா,விமானப்போக்குவரத்துத்தொழில் முதலாளிகளால்தான் நடத்தப்படவேண்டும் என்று சொல்லிவிட்டார்" என்று கேட்கிறீர்கள்— ஆமாம் சார், ஆமாம்! அவர், நேருஜி சர்க்காரில் ஒருவர்தான்— பேசினதோ பேவூர்பாஷை— இருப்பதோ சுதந்திரசூரியன் உதித்தது காணீர் என்று சிந்துபாடிய இடைக்கால தேசிய சர்க்காரில் —சொன்னதோ......................

ஏன், ஒருமாதிரியாகஇருக்கிறீர். நம்ம சர்க்கார். நேரு சர்க்கார் பேவூர் போலிருக்காது அதன் போக்கு என்றீரே! பேவூர் என்ன சொன்னாரோ, ஏகாதிபத்யசர்க்கார் என்ன சொல்லிற்றோ, அதையேதானேதேசிய சர்க்கார், காங்கிரஸ் சர்க்கார் கூறுகிறது...................

ஏன் சார்! தலைவலியா?........

உள்நாட்டு விமானப்போக்குவரத்து விஷயம், இப்படி முதலாளிகளின் கையிலே போய்விட்டதா! வெளிநாட்டுக்கும்இங்கும், விமானப் போக்குவரத்து இருக்கிறதே, அதன் விஷயம் எவ்வளவில் இருக்கிறது தெரியுமோ! அதையும்சர்க்கார்நடத்[...]வதாகக் காணோம்.

ராபர்ட் கன்னிங்
காப்டன் டூ
ஸ்டாகல்பர்க்

என்று மூன்று அமெரிக்க[...] பிரமுகர்கள் கராச்சிவந்து இற[...]கினர் அக்டோபர் 4-ந்தேதி.

சாதாரணப் பிரமுகர்களல்ல[...] தாஜ்மஹால் பார்க்கவந்தவ[...]களல்ல. இவர்கள் ஒரு தூது[...] கூட்டம், இதற்குத் தலைவரா[...] வந்திருக்கிறார் ஜெனரல் பிரவுன்[...]வேல் என்பவர். இவர் ட்ருமெனின் விசேஷ தூதராம்!

பிரமுகர்கள், அமெரிக்க சர்[...]காரின் ஆதரவில் வந்திருக்கிறா[...]கள். அவர்கள் அமெரிக்காவிலுள்ள விமானப் போக்குவர[...]துக்கம்பெனிகளின் முக்யஸ்தர்[...]கள்! அமெரிக்காவுக்கும், இந்தி[...]யாவுக்கும் இடையே விமானப் போக்குவரத்துக் கம்பெனிநடத்[...]தத்தங்களுக்கு அனுமதிதரவேண்டும் என்று இந்திய தேசியசர்க்காரைக்கேட்கவே, வந்திருக்கிறார்கள்! நியூயார்க்கிலிருந்து பம்பாய்க்கு மூன்றுநாளில் பறக்கலாமாம்!

இந்தக்கம்பெனி வைக்க அனுமதி கேட்டனர் அமெரிக்கர் முன்பு—அதாவது தேசியசர்க்கார் இல்லா முன்பு— தரவில்லை[...]

இப்போது வந்திருக்கிறார்கள் தேசிய சர்க்காரிடம், அனுமதி பெற்று, விமானப் போக்குவரத்து நடத்த.

வானவீதியிலே நடைபெறும் காரியத்தைக் கவனியும்! உள்நாட்டு விமானப்போக்குவரத்து உள்நாட்டு முதலாளிகளுக்கு! வெளிநாட்டுப் போக்குவரத்து அமெரிக்க முதலாளிக்கு!

சர்க்கார் என்ன செய்கிறது? தேசியமயமாக்கும் கொள்கை என்னவாயிற்று? சோஷியலிஸ்டு பண்டிதர் ஏன் இப்படி சகலத்தையும் முதலாளிகள் ஆக்ரமிப்பதைச் சகித்துக்கொண்டிருக்கிறார்? சொல்லுங்கள் சார், கேட்போம்.

★

சர்டிபிகேட்

"சகல ஜனங்களுக்கும் வேண்டிய துணியைச் சப்ளைசெய்வதற்கான நிலைமையில் கதர்த்திட்டம் எப்பொழுதுமே வரமுடியாது"

(தினசரி)

ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100-நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.

திருவிளையாடல்

7-பக்கத் தொடர்ச்சி

என்று கூறியதாகவே சேக்கிழார் பாடியுள்ளார். அதாவது, நெருப்பிடுவதைத்தவிர வேறுவழியில்லையாகில் அதனையே செய்யுங்கள் என்று பாண்டியன் சமணர்களுக்குக் கூறினன் என்பது இதன்பொருள்.

இனிப், பாண்டியன் இக் கொடுமைக்கு ஒருபோதும் உடன்பட்டிருக்கவே மாட்டான் என்பதும், அவன் எதனையும் நடுநின்று உணர்ந்துகடைப் பிடிப்பவன் என்பதும் அவனைப் பற்றிக் கூறப்படும் பலநிகழ்ச்சிகளிலிருந்து நன்கு புலனுகின்றது. பாண்டியனுடைய தூய்மைக்கும் நேர்மைக்கும் உரிய சான்றுகளைப் பின்னல் ஆராய்ந்துவிளக்குவாம். இங்கு சேக்கிழார், சம்பந்தருக்கு உயர்வு கொடுக்கவும் பாண்டியனுக்கு இழிவுகற்பிக்கவும் கையாண்ட முறையையே எடுத்துக்காட்டுகின்றேம். இங்ஙனம் பாண்டியனை இழிவுபடுத்திய சேக்கிழார் எப்படிப்பட்டவர்? ஒரு அரசனுக்கு அமைச்சராக இருந்து அரசியலை ஒழுங்காக நடத்தியவர் என்று சொல்லப்படுபவர்! அரசியல் அறிவுபெற்ற சேக்கிழாரே, ஒரு அரசன் முன்பின் யோசனையின்றி — விசாரணையின்றி ஒருவன் தங்கியிருக்கும் இடத்திற்கு நெருப்பிடுங்கள் என்று கட்டளையிட்டான் என்பதாகக்கூறுகிறார் என்றால், அதனை எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? ஒருக்கால், அரசன் அங்ஙனம் செய்யும்படி கட்டளையிட்டது உண்மையென்று வரலாற்றில் காணப்பட்டாலும், அதனை அரசியல் அறிவுபெற்ற சேக்கிழார்,

> "இப்படி ஒரு அரசன்
> செய்திருப்பானு?
> இது அரசியல் நெறி
> முறைக்கே மாறன்றே!
> என்றாலும் வரலாற்றில் அப்
> படித்தான் காணப்படுகின்
> றது; அதன்படியே நான்
> புராணத்தைப் பாடுகின்
> றேன்; இதனைப் படிப்ப
> வர்கள் என்மீது குற்றம்
> சாட்டுதல் கூடாது"

என்றுவது ஒருபாடல் பாடியிருந்தால், சேக்கிழார் மீது நாம் எவ்வித குற்றமும் சுமத்துவதற்கில்லை. பெரியபுராண மூலத்தில் காணப்படாத எத்தனையோ நிகழ்ச்சிகள், சேக்கிழாரின் 'கைச்சரக்காகப்' பாடப்பட்டிருக்கும் போது, பொறுப்பும் தேவையுமுள்ள இடங்களில் மட்டும் சேக்கிழார் தம்கைச் சரக்கைப் பயன்படுத்தாதகாரணம் என்ன? என்பதையாவது எண்ணிப்பார்க்க வேண்டாமா? ஒருசமயத்தையும் அதன் ஆசிரியர்களையும்உயர்வுபடுத்தும் உற்சாகத்தில், ஒரு சமூகத்தையும் அதன் உயரிய நற்பண்புகளையும் இழிவுபடுத்தும் முறை பெரியபுராணத்திற்போல வேறெந்த நூலிலும் மிகுதியாகக்காண்டல் அரிது,

இனிச், சம்பந்தர் தங்கியிருந்த மடத்தில் மந்திரத்தீஇடுவதற்கு மன்னனும் உடந்தையாக இருந்தான் என்ற பகுதிக்குப், பெரிய புராண உரையாசிரியர் ஒருவர்,

> "மந்திரத்தீ சுடாதெனமன்
> னன் கருதினன் போலும்"

என்று பொருள் விரித்துள்ளார். மந்திரத்தீ சுடாதுஎன்பது எவராலும் எளிதில்ஒப்புக்கொள்ளப் படக்கூடியதாகும். இதனை ஒரு உரையாசிரியர் தம்முடைய புலமையின் வாயிலாக அளந்து கூறவேண்டியதில்லை. இதனல், அவருடைய புலமைக்கு ஏற்றமோ மதிப்போ ஏற்பட்டுவிடாது. மந்திரத்தீ சுடாது என்று மன்னன் கருதியிருந்தால், அந்தக்கருத்தைச் சமணர்கள் கூறிய அதேவினாடியிலேயே அவன் தன்னுடைய கருத்தையும் வெளியிட்டிருப்பான். சமணர்கள் அங்ஙனம் செய்யமுற்படுவது பயனற்றகாரியம்என்று கூறித் தடுத்துமிருப்பான். அன்றியும், மந்திரத்தீ சுடாது என்பதைமன்னன்உண்மையாகவே நம்பி அங்ஙனம் கூறினன் என்பதும் நினைத்தணையும் பொருந்தாப் போலியுரையாம். எப்படியென்றால், சமணர்கள் அந்தக் கருத்தை வெளியிட்ட உடனே மன்னன், அவர்களை நோக்கி, "மந்திரமாவது மனையைக் கொளுத்துவதாவது! மந்திரத்தால் ஒன்றைச் சுட்டெரிக்கலாமென்றால், சுடுந்தன்மைவாய்ந்த இயற்கைப் பொருளான நெருப்பு என்பதாக ஒன்று தனியாக இருப்பானேன்? சுடவேண்டிய எல்லாப் பொருள்களையும் மந்திரத்தால் சுட்டுவிடலாமே! தண்ணீர் வெந்நீராக வேண்டும்—அந்த அளவுக்கு ஒரு மந்திரம்; வீடு வெந்துசாம்பலாகவேண்டும்—அது வேகுமளவுக்கு ஒரு மந்திரம், இங்ஙனம் சுடப்படவேண்டிய பொருள்களுக்கு ஏற்றவாறு மந்திர ஒலியின் அளவையும் கூட்டியும் குறைத்தும் உச்சரித்தால் போதுமே! இதற்காக உலகம் நெருப்பும் விறகும் தேடி அலைய வேண்டியதில்லையே! என்று கூறியிருப்பான். அதுமட்டுமன்று! மந்திரத்தீ சுடாது என்று மன்னன் கருதியிருந்தால், அதனைக்கூறிய சமணர்களையும் சமண சமயக் கொள்கைகளையும் ஒப்புக்கொண்டு அச்சமயவழி நின்றிருக்கமாட்டான். ஆனல், மன்னன் அங்ஙனம் நடந்தான் என்பதற்குப் புராணத்திற் கருவியில்லை.

இனி, ஒருக்கால், மந்திரத்தீ சுடாதென்பது உரையாசிரியரின் கருத்தாக இருந்து, அதனை அவர், மன்னன்பால்ஏற்றிக்கூறியிருக்கலாம்; இதில்என்னதவறு என்றும் சிலர்கேட்பர். உண்மை. ஒருக்கால்இது உரையாசிரியரின் கருத்தாக இருந்திருக்கலாம் என்பதை நாமும்ஒப்புக்கொள்கிறேம். ஆனல் இந்தக்கருத்தை உரையாசிரியரின்சொந்தக்கருத்தாகக் கொள்வதற்கும் இல்லையே! எப்படியென்றால், சமணர்களால் சம்பந்தரின் மடத்திற்கு இடப்பட்ட நெருப்பைச் சம்பந்தர் தம்முடைய தேவாரத்தின் துணைகொண்டு வெப்பு நோயாக மாற்றி அதனைப்பாண்டியன்பால் அனுப்பி அவனை வெப்பு நோயால் வருந்தும்படி செய்தார் என்று சொல்லப்படும் பகுதிக்கும் இவ்வுரையாசிரியர் பொருள் எழுதியுள்ளார். ஆனல், இங்கு, அவர் தம்முடைய "மந்திரத்தீ சுடாது" என்ற கருத்தைத் தழுவி உரைஎழுதியதாகக் குறிப்பு எதுவும் காணப்படவில்லை. மற்று, மந்திரத்தீ சுடும் என்பதை வலியுறுத்தும் முறையிலேயே அவருடைய உரை இங்கு விரிந்து நிற்கின்றது. எப்படியென்றால், சமணர்கள், தங்கள் மந்திரத்தால் தீயிடும்முயற்சி வெற்றி பெறுது போகவே, நெருப்பைக் கையிற்கொண்டு மடத்திற்குத் தீயிட்டனர்என்று சொல்லப்படும் பகுதியில், சம்பந்தர், அந்தநெருப்பை வெப்பு நோயாக மாற்றிப் பாண்டியனைத் துன்புறுத்தும்படி செய்தார் என்பதற்கு இவ்வுரையாசிரியர் மறுப்பேதும் கூறவில்லை. மந்திரத்தீ சுடாதென்பது இவ்வுரையாசிரியரின் கருத்தாக இருந்தென்றால், இங்கும் அதனை வலியுறுத்தியிருக்கவேண்டும். ஆனல் இங்கு மந்திரத்தீயின் மகிமையைப் பெரிதும் ஆதரித்தே உரை எழுதியுள்ளார். அதாவது, சம்பந்தரின் தேவார மந்திரபலத்தால் நெருப்புத்தன்னுடைய உண்மையான வடிவத்தை மாற்றி அதன் குணமான வெப்பத்தோடு மட்டும் சென்று பாண்டியனை வருத்திற்றும். அதிலும் "அவ்வெப்பம்" சம்பந்தர் சொல்லியபடி 'பையவே' சென்றுபாண்டியனை அடைந்ததாம்.

சமணர்களின் மந்திரத்திற்குக் கட்டுப்படாத நெருப்புச், சம்பந்தரின் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டது மட்டுமன்று, அவர் சொல்லியபடி யெல்லாம் ஆடிற்றும். இந்த இடத்தில் உரையாசிரியரின் மறுப்பு எதுவும் பொறிக்கப்படவில்லை. மந்திரத்தீ மன்பதையை (உலகத்தை) ஒன்றும் செய்யாது—செய்யமுடியாது என்பது உரையாசிரியரின் கருத்தென்றால்இங்கும் அதனை வலியுறுத்தி யிருக்க வேண்டும். அங்கு, சமணர்களின் மந்திரத்தீ சுடவில்லை. இங்கு, சம்பந்தரின் மந்திரத்தீ சுட்டது மட்டுமன்று, அவர் ஆணையிட்டபடியெல்லாம் மெதுவாகவும், விரைவாகவும், வடிவம் மாறியும் வேலைசெய்திருக்கிறது. அதுமட்டுமன்று; பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்பு நோயைச் சம்பந்தர் தம்முடைய மந்திரபலத்தால் மாற்றிய பொழுது, பாண்டியனுக்கிருந்த வெப்பம் அறவே நீங்கி, அவனுடைய உடம்பின் ஒருபகுதி பொய்கைபோல் குளிர்ந்துவிட்டதாம். சம்பந்தரின் மந்திரபலம் இதோடு நிற்கவில்லை. இன்னும் கேளுங்கள் வியப்பை! பாண்டியனுடைய உடம்பின் இன்னெருபகுதியை அவ்வெப்பம் இருமடங்காக வருத்திற்றும்: அதாவது, பாண்டியனுக்கேற்பட்ட வெப்பு நோயை மாற்றுவதற்குச் சம்பந்தரும் சமணர்களும் போட்டியிட்டுச், சம்பந்தர் வலப்பாகத்தையும், சமணர்கள் இடப்பாகத்தையும் எடுத்துக்கொண்டு தத்தம் மந்திரத்தை ஏவினராம். அதில், சம்பந்தரின் மந்திரபலம் பாண்டியனின் வலப்பக்க உடம்பைப் பொய்கை (குளம்) போல் குளிரும்படி செய்துவிட்டுச், சமணர்கள் எடுத்துக்கொண்ட இடப்பக்கத்தில் போய்ப்பாண்டியனை,

> "அழலென மண்டு தீப்
> போல், இருபுடைவெப்புங்
> கூடி இடங்கொளா தென்
> னப் பொங்க"

என்று சேக்கிழார் கூறுகின்றபடி பெரிதும் வருத்திற்றும். இவ்வளவுபலம் பொருந்திய மந்திரத்தைத்தான் உரையாசிரியர்,

> "மந்திரத்தீ சுடாதென்று
> மன்னன் கருதினன் போலும்"

என்று மிக எளிதாகக் கூறிவிட்டார். இனி, ஒருக்கால், சமணர்களின் மந்திரம் பலிக்காது; சைவர்களின் மந்திரம் தான பலிக்கும் என்று உரையாசிரியர் கருதி இங்ஙனம் சொன்னுர் என்று கொள்வதற்கும் இல்லையே! அவர், பொதுவாக 'மந்திரத்தீ சுடாது' என்று கூறினரேயன்றிச், "சமணர்களின் மந்திரத்தீ சுடாது, சைவர்களின் மந்திரத்தீ சுடும்' என்று வலிந்து பொருள்கொள்ளக் கூடிய முறையிலேனும் சொல்லவில்லையே! 'மந்திரம்' என்ற சொல்லைப் பொதுவாக வைத்தன்றே அதற்குச் 'சுடுந்தன்மை' இல்லையென்று அடித்துக் கூறியிருக்கின்றார்.

இனிச், சமணர்களால் இடப்பட்ட மந்திரத்தீ சம்பந்தரின் மடத்தைச் சுடவில்லை என்பதற்குச், "சம்பந்தரும் சிவனடியார்களும் அங்கு தங்கியிருந்தார்கள், எனவே சமணர்களால் ஏவப்பட்ட தீமந்திரம் அங்கு செல்ல முடியவில்லை" என்பது நூலுரை ஆசிரியர்களின் கருத்தாகச் சொல்லப்படுகின்றது அல்லது கொள்ளப்படுகின்றது. சமணர்கள், தங்களுடைய மந்திரபலத்தால்தீமூட்ட முடியாதென்று நினைத்திருந்தால் ஒருபோதும் அந்த முயற்சியில் இறங்கியிருக்க மாட்டார்கள். மந்திரத் தீமூட்டும்முயற்சியைக் கைவிட்டுக் 'கைத்தீ' வேலையையே மேற்கொண்டிருப்பார்கள். ஒருக்கால் அரசனிடம் மந்திரத்தீ மூட்டுவதாக உரைத்திருந்தாலும், தீமூட்டும் போது அந்த முயற்சியை ஒருபோதும் மேற்கொண்டிருக்கவே மாட்டார்கள்.

இனிச், சைவமெய்யன்பர்கள் அங்கு 'தங்கியிருந்த காரணத்தால்தான் சமணர்கள் இட்ட மந்திரத்தீ மடத்தைச் சுடவில்லை

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 13—10—46 [ஞாயிறு

எதிர்காலத் தளபதிகள்!

★

அறிவீனமான அறிக்கை.
தமிழ்நாட்டுக்குப் பெருங்கேடு.
கண்மூடித்தனமானகொள்கை.
ரொம்பத்துணிச்சலான கொள்கை.
மோசமான கொள்கை.
பைத்யக்காரத்தனம்.
முழுப்பூசனியைச் சோற்றில் மறைக்கும் முட்டாள்தனம்.
தமிழ்நாட்டிலுள்ள மில்லைத் தொலைக்கும் சூழ்ச்சி.
மாகாணப் பொருளாதாரத்தில் மண்போடும் வேலை.

பத்திரிகைகளில் மட்டும் இதுவரை வெளிவந்த, 'அர்ச்சனை'யில் ஒரு சிறுபகுதிமேலே நாம் பொறித்திருப்பது. எதிர்க்கட்சி ஏடுகளில் கண்டவை அல்ல, "எத்தி எத்தித் தொழுவோம் யாமே!" என்றமுறை கொண்ட சொந்தக்கட்சிப் பத்திரிகைகள்.

பிரகாசத்தின் திட்டம், வெளிப்பட்டதும், மறைவாய்ப்புதைத்து வைத்திருந்தபல "உண்மைகள்" படீர், படீரென வெடித்து வெளிக்கிளம்பி விட்டன. நாம், காங்கிரஸ் கட்சியிலேயோ, மந்திரிசபையிலேயோ, ஏற்பட்ட "வெடிப்புகளை"க் குறிப்பிடவில்லை. காங்கிரஸ் அன்பர்கள் மனதிலேயே, இதுவரை தூங்கிக்கொண்டிருந்த பல உண்மைகள் திடீலென்று எழுந்துவிட்டனவே, அந்தச் 'சேதி' யைக் கூறுகின்றோம், நமக்கு அதிலே ஆச்சரியமில்லை, அவர்களுக்கு ஆச்சரியம் மட்டுமல்ல, ஆர அமர உட்கார்ந்து யோசிப்பார்களானால் கொஞ்சம் அச்சமும் உண்டாகும்.

கதர் உருப்படாது! எந்தக் காலத்திலாவது, இந்தமாதிரியானவாசகத்தைத் தமதுவாயே கூறத்தமது செவி கேட்கவேண்டிய நிலை பிறக்கும், என்று, காங்கிரஸ் பிரமுகர்கள் எண்ணியிருந்திருக்கமுடியுமா! காங்கிரஸ் ஏடுகளில், காங்கிரசின் தாரகமான கதர்த்திட்டம்பயனற்றதுஎன்று அச்சிடப்பட்டு, அதனைப்படிக்கும் நிலைமை ஏற்படும் என்றுஎந்தக் காங்கிரஸ்காரராவது நினைத்திருக்கமுடியுமா?

"கதர், கதர் என்று பேசலாம் நண்பரே! ஒரு காலம் வரும், கதர், உருப்படாத திட்டம் என்று நீங்களே உணரப் போகிறீர்கள்" என்று சொன்னதற்காக, வீசிய கற்களை நாம்சேர்த்துவைக்கவில்லை, நேரமில்லாததால், ஆனால் "சகலஜனங்களுக்கும் வேண்டிய துணியை சப்ளை செய்வதற்கானநிலைமையில் கதர்த்திட்டம் எப்பொழுதுமே வரமுடியாது" என்று, தினசரி அக்டோபர் 7-தேதி எழுதிற்று—அதைப் பார்க்கநேரம் இருந்தது—வீசப்பட்ட கற்கள், பொற்கட்டிகளாக மாறியிருந்தால்ஏற்படக்கூடிய மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சி, அந்தவாசகத்தைப்பார்த்தபோது எந்தத்திராவிடனுக்கும் உண்டாகித்தான் இருக்கும்!

கதர்த்திட்டம் உருப்படும், நாட்டு மக்களின் மொத்தத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதுதான், பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்தும், மக்களைக் காப்பாற்றும், என்ற நம்பிக்கை இருக்குமானால், தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டி, மில் ஒழிப்புக்கு,க்கள் ஒழிப்புக்குக் களித்தது போலக் களிப்படைந்திருக்க வேண்டும், அதுபோது கங்காநாயுடுக்களும் குமாரராஜாக்களும் கவலைப்பட்டால், நாம் பொருட்படுத்தப் போவதில்லை—கூடாது. ஆனால் என்ன விதமானகருத்து, காங்கிரசாருக்கு? நமக்குஅறிமுகமான ஒரு சித்தவைத்தியரின் கவனம் வருகிறது.

அவருக்கு அபாரமானபெயர்! கைராசி! அபூர்வமான முறை! அயம் என்ன, அப்ரேக் என்ன, முப்புவரை சென்றவர்! அவருடைய அருமைமகனுக்கு ஆறு நாளாகக் காய்ச்சல்!! டாக்டர் ஆர்டிதுரையின் ஆஸ்பத்திரியிலே சிகிச்சை! பகலில், சித்தவைத்தியர் தமது சுத்தசித்தி விநாயகர் சித்த வைத்யசாலையிலே இருப்பார் நோயாளிகட்குச் சூரணமும் கஷாயமும் தந்துகொண்டு; பிற்பகலெல்லாம் தமது, புதல்வரின் பக்கம் இருப்பார் ஆஸ்பத்திரியில்; மாலையில் மணிகண்டீஸ்வரர் கோயிலுக்குச் செல்வார்விளக்கேற்ற; இரவில் தும்பவனத்தம்மன் கோயில் பூஜாரிவீடுபோவார் விளக்குவைத்துக் குறிபார்க்கவும், மந்திரித்த விபூதி பெற்று வந்து மகனுக்குத் தரவும்!

இந்த நிலையில் இன்றுள்ள காங்கிரசார் தொகை ஏராளம், வேறு சிலர் உண்டு, "எதுவந்தாலும் சரி, மூன்றேகால்! விடாதே" என்றுள்ளவர்கள்; அவர்களுக்கும் மனோதத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கும் தொடர்பு ஏற்படவேண்டுமேயொழிய, நமக்கும் அவர்களுக்கும் தொடர்புஇராது; அவர்கள் மேதைகள்!!

பெரும்பாலான காங்கிரசார், கதரை ஆதரித்தும், அதுபற்றிப் பிரசாரம் செய்தும், குறைகாணுவோரிடம் கோபித்தும் இருந்த அந்தக்காலத்திலேயே, அவர்கள் மனதில், எங்கோ ஓர்பாகத்தில், கருவில் உருவாகும் குழவி போல, உண்மைஉருவெடுத்தது. இது பிரசவகாலம்! கொஞ்சம் வேதனை! சத்தம்! சிகிச்சைகூடத் தேவைப்படுகிறது.

"கதர் உருப்படாதாம்! கேட்டீரா, செட்டியாரே! கதர் ஒருநாளும் உருப்படாது, என்று சொன்னான்"

"செப்தே செப்பனி! சொல்லட்டுமே' நமக்கென்ன. இதுக பேச்சை யார் கேட்பாங்க. மகாத்மாகாந்தி, ஜவஹர்லால் பண்டிதர், இவங்களுக்கெல்லாம் தெரியாதது, இதுங்களுக்குத் தெரிச்சுப்போச்சா. விடு.'

"எனக்குச்சரியான கோபம். நாமெல்லாம் கதர் கட்டறே மேல்லோ! இவனுங்க, கதரைக் கேலிசெய்து, அது உருப்படாதுன்னு சொன்னா, நமக்குக் கோபம் வராதா!"

'அவ்வு! அதெ விடப்பா! போகட்டும், 'எனைப' காவலா! உன்ட்டாதா?"

"எது? 60 கூட இல்லை. 80 எகவிலை"

இப்படி உரையாடல் நடக்கும், பல இடங்கள் உண்டு. அவர்களில் பலருக்குக் கதர்என்ற பிரேமை! 80, 60, என்ற பேச்சு, மில் நூல்பற்றியது. அது வியாபாரம்! பிரேமை, கதரைக்கட்டும்படித் தூண்டிற்று! தேசபக்தி, கதரைக் கண்டிப்பவர்மீது கல்லை வீசச்செய்தது! வாழ்க்கை, வாழ்வதற்குப் பணம் தேடச் சொல்லிற்று. அதற்கு 60, 80, தேவைப்பட்டது, வசந்தா, பங்கஜா, மில்களின் தொடர்புஇருந்தது. வியாபாரத்தில் ஆலைநூல்! அணிவதற்குக்கதர்! இதனை 'வேஷம்' என்று சொல்லவேண்டும், சொன்னாலோ, அவர்கள் வெட்கத்தை மறைத்துக்கொள்ளக் கோபித்துக்கொள்வர்!

இந்நிலையில் உள்ளவர்கள், இன்று, மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாதுள்ள கஷ்டத்தில் உள்ளனர்.

இந்தக்கஷ்டத்தைப்போக்கிக் கொள்ளத்தைரியம் வேண்டும். ஆசிரியர் சொக்கலிங்கம், அந்தத் தைரியத்தைத் துணைக்கு அழைத்து, "மில்கள்பூராவையும் எடுத்துவிட்டு, எல்லோருக்கும் கதர் சப்ளை செய்யப்போகிறோம் என்று சொல்வது வெறும்பைத்யக்காரத்தனமானதாகும்" என்று எழுதினர்.

இதுபோன்ற வாசகம் காந்தியார் காலத்திலே; அவருக்குக் கதரிடம் நம்பிக்கை இன்னும் இருக்கும் நேரத்திலே, உத்தமன் பிறந்தநாள் ஊரெங்கும்திருநாள் என்று உவகையுடன் கொண்டாட்டம் நடத்திய வாரத்திலே, காங்கிரஸ் ஏட்டிலே, வெளிவரும், என்று யார், எண்ணியிருக்கமுடியும்! ராட்டின வேகத்தைவிட, மனம் சுழலும் இந்த நிலையைப்பற்றி எண்ணினால்.

எப்படிச்சொல்ல முடிந்தது? அதுதான் தூங்கிக்கொண்டிருந்த உண்மை, எழுந்தது என்றோம். தாலாட்டிமீண்டும் தூங்க வைத்து விடவும்கூடும்! ஆனால், இன்று எழுந்து உலவுகிறது உண்மை.

கதர்த்திட்டம் கவைக்கு உதவாது. கையினால் நூற்றுக் கையினால் நெய்து ஆடையாக்கி, இந்த உபகண்டத்திலுள்ள கோடிக்கணக்கான மக்களின் தேவையைப்பூர்த்தி செய்யமுடியாது, என்றுநாம்முன்புகூறக், கேட்டுக் கோபித்தவர்களெல்லாம், இப்படிச்சொன்னானே, என்று ஆத்திரப்பட்டுப்பேசிப்பேசித், தங்கள் கோபத்தை வெளியே கொட்டிக்கொண்டிருந்த அதே சமயத்திலே நாம்கூறிய 'உண்மை' அவர்களையும் அறியாமல் அவர்கள் உள்ளத்திலே புகுந்துகொண்டது; சமயம் வந்தது, இதோ வெளியே உலவுகிறது; நாம் சொல்லக்கூசும் கடுமையான பதப்பிரயோகத்துடன்!

முட்டாள்தனம்! அறிவீனம்! மோசம்! சூழ்ச்சி! பைத்யக்காரத்தனம்!!

அய்யா! நினைத்தால் நெஞ்சு நடுங்கும், வார்த்தைகளல்லவா?

இவ்வளவும், இதற்குமேலும், எந்தவிஷயத்துக்கு? கதர் மூலம் நாடு வாழவேண்டும் மில்கள் கூடாது என்று மந்திரி பிரகாசம் சொன்னதற்கு. ஏன் கூறினர்? காந்தி பக்தியால்! அவரைக்கண்டிப்பவர்கள் யார்? அவர்களும் காந்தி பக்தர்களே! ஆனால், குருசீட சம்பந்தமாக இவர்கள் "புதிய முறையை" வகுத்துக்கொண்டார்கள். என்ன முறை? குருவிடம் பக்தி காட்டவேண்டும், புகழவேண்டும், அவருக்குத் திருவிழா நடத்தவேண்டும், அவருடைய உபதேசம், நடைமுறைக்கு ஏற்றதல்லவே என்று யாராவது சொன்னால் அவர்களைக்கண்டிக்கவேண்டும், ஆனால் அவருடைய உபதேசத்தின்படி நடந்துகொள்ளத்தான் வேண்டும் என்பதில்லை!

முதலமைச்சர் பிரகாசம் கதர்த்திட்டம், காந்தியார் கூறியது மில்ஒழிப்பும் அவர் சொற்படித்தான் நடத்துகிறேன்—என்றார். அதாவது, குருவின் கட்டளைப்படித்தான் நான் இந்த ஒழிப்பு வேலையில் ஈடுபடுகிறேன் என்று தெரிவித்தார்.

சீடர்கள், இரண்டிலொன்று செய்யவேண்டும். ஒன்று வருகிறகேடு வரட்டும் என்று குருவின் கட்டளைப்படிநடக்கவேண்டும், அல்லது குருவே! தங்கள் உபதேசப்படி நடந்தால் நாடு உருப்படாது, ஆகவே தாங்கள் இந்த உபதேசத்தைச்சுமத்தியே தீருவது என்று தீர்மானித்தால், நாங்கள் தங்களைக் குருவாகஇனியும் கொண்டிருக்க முடியாது என்று நேர்மையாக ஆனால் தைரியமாகக் கூறி விடவேண்டும். அந்தத்தைரியம் சீடகோடிகளுக்கு இல்லை. இன்னம்கொஞ்சநாள் செல்லும் உண்டாக. எனவே அவர்கள், "அவர் மகாத்மா, மகான், மேதாவி, இலட்சியவாதி. அவர்ஏதேதோ சொல்லுவார். அதன்படி எல்லாம் நடக்க முடியுமா? நடந்திருக்கிறோமோ? எத்தனையோ விஷயங்களிலே அவர்சொன்னபடி நாம் நடந்துகொள்ளவில்லை இந்தமில் ஒழிப்பு வேலையிலும், அப்படித்தான், நாம்அவருடைய

(5-ம் பக்கம் பார்க்க)

தளபதிகள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

சொற்படி நடந்து கொள்ளமுடியாது. அதுதான் முறை, முறையோ முறையல்லவோ, அதுதான் புத்திசாலித்தனம்" என்று வாதாடுகிறார்கள். அதாவது கொஞ்சம் நயவஞ்சகம் வேண்டுமென்கிறார்கள். குருவை ஏய்க்கச் சொல்கிறார்கள். குருபக்தியைச் செயலில் அல்ல, சொல்லளவில் காட்டச்சொல்கிறார்கள். இது நேர்மையா? இதுதான் குருபக்தியா? என்று கேட்கிறோம். பதில் கூறவேண்டாம், யோசிக்கட்டும் நண்பர்கள்.

குருபக்தி காட்டிய சீடர்கள், இதுவரை எத்தனையோ காரியங்களில் அவர் வார்த்தைப்படி நடந்து கொள்ளவில்லை என்பதைத் "தினசரி" வெட்டவெளிச்சமாக (வெட்கமுமின்றித்தான்!!) எழுதி இருக்கிறது.

1. வனஸ்பதி உற்பத்திக்காக தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதை மகாத்மா பலமாய் கண்டிக்கிறார். பிரகாசம் காருவுக்கு இது தெரிந்திருந்தும் இந்தமாகாணத்தில் வனஸ்பதி தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதைஅவர் நிறுத்தவில்லை.

2. இந்தியா சட்டசபைக்கு போகவேண்டாம் என்று ஒரு காலத்தில் மகாத்மா சொல்லிய போது, அதைமீறி நமது பிரகாசம்காரு இந்தியா சட்டசபைக்குப் போனார்.

3. மந்திரியாக இருக்கவே கூடாது என்று நேரில் பிரகாசம் காருவிடம் மகாத்மாவே சொன்னார். அதை எவ்வளவு தூரம் பிரகாசம் மதித்துவிட்டார்?

4. சர்க்காரே கூடாது என்பது அவருடைய இலட்சியம். எல்லோரும் பிரமச்சாரிகளாகவே இருக்க வேண்டுமென்பது அவர் லட்சியம். இவற்றை எல்லாம் எல்லாரும் பின்பற்ற முடியுமா?

என்று இப்படித் "தினசரி" சரமாரியாக எழுதுகிறது அக்டோபர் 7-ல். என்ன இதன் பொருள்? குரு, என்னென்னவோ சொன்னார், கேட்டோமா? இல்லையே! அதுபோல, மில்விஷயமாகவும் அவர் சொல்வதைச் சொல்லிக்கொண்டே இருக்கட்டும், நாம் நமது இஷ்டப்படி நடப்போம் என்பது தான்.

இதுவா குருபக்தி? இதற்கு ஒருகுரு ஏன், அவருக்குச்சீடர்கள் என்று கூறிக்கொள்வானேன்? நேர்மையும் தைரியமும் இருந்தால், கதர்த்திட்டத்தை வலியுறுத்த வேண்டாமென்று குருவுக்குத் தெரிவிக்கவேண்டும் அல்லது குருவை விட்டு விலக வேண்டும். அதைவிட்டுப் பிரகாசம் மீதுபாய்வது, வீரதீரத்தைக் காட்டுவதாகாது, காரியமும் நடக்காது. இன்றைக்கில்லாவிட்டால் இன்னம் கொஞ்ச நாளில், சீடகோடிகள், தமது போக்கைத் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும்.

எப்படி, கதர்த்திட்டம் கவைக்கு உதவாது என்று இன்று ஏற்பட்டு விட்டதோ, அது போலவே, குருசீட சம்பந்தமும். நடைமுறைக்கு ஏற்றதாகஇல்லை என்பதை உணர்ந்து கொள்ளத் தான் போகிறார்கள்.

பிரகாசம் போட்ட வெடிகுண்டு இந்தப் பிரச்னையைக் கிளப்பிவிட்டது. உபதேசம்மட்டும்செய்ய வேண்டியது குருவின் வேலை. குருவைப் புகழ்ந்துபேசி ஊராரிடம் நல்லபிள்ளை என்ற பெயரெடுத்துக்கொண்டு அவருடைய உபதேசத்தைக்காற்றிலே பறக்கவிடுவதுசீடர்கள்வேலை!

இத்தகைய குருசீட சம்பந்தம், முறையா, சரியா, தேவையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியநாள் நெருங்குகிறது. அந்த நாளைக்காணப் பயந்து கொண்டு, பிரகாசம்காருமீது மோதி, கோபத்தைத் தீர்த்துக் கொள்ள முயற்சி நடக்கிறது. இது போதாது— பிரச்னையைத் தீர்த்துவைக்காது.

முக்கியமான பிரச்னை, மூலாதாரமான பிரச்னை பிரகாசம் மந்திரிசபையின் போக்குபற்றி யோசிக்கவேண்டியதல்ல.

காந்தீயத்தைப்பற்றியே, ஒரு முடிவுக்கு வரவேண்டுவதே, மூலாதாரமான பிரச்னை.

வடநாட்டுப் பொருளாதார ஏகாதிபத்ய வளர்ச்சியே முக்கியமான பிரச்னை.

இதை ஓராண்டு ஈராண்டு, பயத்தாலோ, பக்தியாலோ, பாசத்தாலோ, பலனைக்கோரியோ, நீண்டநாள் தொடர்பினாலோ கவனிக்க முடியாமல் ஒத்திப்போடலாம்—ஆனால் ஒரு நாள் வந்தேதீரும் — விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்—இது பற்றி யோசித்துத் திட்டமான முடிவுக்குவரவேண்டிய அவசியம் ஏற்பட்டேதீரும். அந்த நிலைமையிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியாது. இன்றுநாம் கூறும்போது கசப்பாகவும், கோபமாகவுந்தான் இருக்கும்; ஆனால் கதர் உருப்படமுடியாத திட்டம், என்ற உண்மையையும், காந்தியாரின் இலட்சியங்களில் பல, நடைமுறையிலே செய்து காட்டமுடியாதவை என்றஉண்மையையும் காந்தியாரின் சீடர்கள் என்போர், அவருடைய உபதேசத்தின்படி நடந்து கொள்வதில்லை, நடந்துகொள்ள முடிவதில்லை என்ற உண்மையையும், எப்படி இன்று பல காங்கிரசாரும், எல்லாக்காங்கிரஸ் ஏடுகளும்தெரிந்துகொண்டனவோ, அதுபோலவே காந்தீயம் கவைக்கு உதவாதது என்பதையும், வடநாட்டு ஏகாதிபத்யம் நம்மை வாழவிடாது என்பதையும் உணரத்தான் போகிறார்கள். அவர்கள், நமது திராவிடஇயக்கத்தின் எதிர்காலத் தளபதிகள்! அவர்களின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறோம். இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திய பிரகாசம் காருவுக்கு நமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

●

திருவிளையாடல்

6-ம் பக்கத் தொடர்ச்சி

தமே — எந்தக் காரணத்தைக் கொண்டும் கையாளவே மாட்டான் என்பதை அறிவுள்ள எவரும் ஒப்புக்கொண்டே தீருவர். எனவே, நாம், ஒன்றைப்படிக்கும்போது, அதில் இல்லாததையோ அல்லது ஆராய்ச்சியிற்பட்டு ஐயம் உண்டாக்காததையோ வேண்டுமென்றேவிரித்துக் கூறும் வழக்கினர் அல்லர் என்பதை இனிமேலாவது அத்தகைய எண்ணங்கொண்டோர் கைவிடுவார்கள் என்று நம்புகிறேன்.

இனி, ஒருக்கால், சம்பந்தர்கையாண்ட ஏவல்முறைவேறு; இஞ்ஞான்றை மக்கள் கையாளும் ஏவல் முறைவேறு, அதனையும் இதனையும் ஒன்றுபடுத்திக்கூறி, அதனை இதற்கு ஒப்புவமை கூறலாமோ என்றும் சிலர் கேட்பர். விலங்கு,பொன்னாலானால் என்ன? இரும்பாலானால்என்ன? இரண்டும் விலங்கிற்குரிய தொழிலைச் செய்தே தீரும்என்ற மேற்கோளையே அத்தகையினர்க்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். அன்று செய்யப் பட்ட ஏவல், சம்பந்தர் செய்தார்என்பதனாலோ, அதற்குப் பயன்பட்டமந்திரம் தேவாரம் என்பதினாலோ அதனை உயர்ந்தாகவும்; இன்றுசெய்யப்படும் ஏவலை, ஒருகாத்தான் செய்கிறான் என்பதனாலோ, இதற்குப் பயன்படும் மந்திரம் ஓம்மலையாளபகவதி என்பதனாலோ தாழ்ந்ததாகவும் கருதப்படமாட்டாது. செய்வனும் செய்யப்படுவதற்குக் கையாளப்படும் கருவியும் வெவ்வேறுதல்பற்றி, செய்யப்படும் காரியத்தையும் வேறுஎன்று கூறுவது கருத்திழந்தோர் செயலேயாகும். குடியிருக்கும் வீடு, ஓட்டு வீடாய் இருந்தால் என்ன? ஓலை வீடாய் இருந்தால்என்ன? சம்பந்தர், தனக்குத் தெரிந்த தேவாரத்தை மந்திரமாகப் பயன்படுத்தி 'ஏவல், தொழிலைச் செய்தார்; காத்தான், தனக்குத் தெரிந்தஓம்மலையாளபகவதி என்ற மந்திரத்தால் அந்தத் தொழிலையே செய்கின்றான். இதில் தவறென்ன காணமுடியும்?

இனி, இந்த ஏவல்—பில்லி—சூனியம்—பேய்—பிசாசு ஆகிய தொழில் முறையினால் உண்மையான பயன் யாதாயினும் ஏற்படுகின்றதா? ஏற்பட முடியுமா என்பது குறித்துநாம் இங்கு ஆராயவில்லை. இதுபற்றி ஒரு தனி ஆராய்ச்சி செய்து, அதன் மண்டையில் அடிக்க வேண்டுமாதலால், இங்கு எடுத்துக்கொண்ட பொருள் பற்றிச் சிறிதுகூறி இதனை முடிப்பாம்.

இனிச், சம்பந்தர், பாண்டியன் பால் ஏவிய நெருப்புக்குப்,

> "பையவே சென்று பாண்டியர்க்காகவே,,

என்று கட்டளையிட்டு அனுப்பினாராம். இதற்குச் சேக்கிழார் கூறும் காரணம், "மங்கையர்க்கரசியாரது மங்கலநாணைப் பாதுகாக்கவும், குலச்சிறை நாயனாரது அன்பை முன்னிட்டும் மன்னவன்பால் உற்றபிழை கருதியும், அவன் மீண்டுஞ் சிவநெறி அடையப்போதலை நினைந்தும், "பையவேசென்று" என்று பாடினதாகச்சொல்லப்படுகிறது. விஞ்ஞான முறையில், மெதுவாகவும் விரைவாகவும் ஓட்டப்படும் பொறி (இயந்திரங்)களைப் போலச், சம்பந்தரும் தம்முடைய மந்திரப் பொறியை ஓட்டுவதில் 'தயவு' காட்டி மெதுவாக ஓடும்படிசெய்து, மங்கையர்க்கரசி—குலச்சிறை—பாண்டியன் ஆகியவர்களைக்காப்பாற்றியது குறித்துயாரும் வியப்படையாவிட்டாலும்; "இன்று, ஏதேதோ பொறிகளாம்!மின்சாரமாம் அவற்றை வேண்டியபடி மெதுவாகவும் விரைவாகவும் ஓட்டக்கற்றுக் கொண்டனராம்! இது ஒரு வியப்புக்குரிய செயலா? அன்று, நம்ம சம்பந்தர், மந்திரத்தையே தாம் விரும்பியபடி மெதுவாகவும் விரைவாகவும்ஓட்டிருயிக்கிறார்.அந்தக்காலத்துவிஞ்ஞானத்துக்கு இந்தக்கால விஞ்ஞானம் எந்தவகையில் குறைந்தது, கூறுமின் பார்ப்போம்" என்று கூறி எக்காளமிடும் 'புராணவிஞ்ஞானி, கண்டுதான் வியப்படையவேண்டும்.

எனவே, இதுகாறும் கூறியவாற்றால், கொல்லா விரதத்தை மேற்கொண்ட சமணர்கள் இந்தக்கொலை பாதகத்தை ஒருபோதும் செய்திருக்கமாட்டார்கள் என்பதும், பாண்டியன் தீ வைக்கும் கொடுமைக்கு உடந்தையாக இருந்திருக்கமாட்டான் என்பதும் புலப்படுவதோடு, வஞ்சனையில் மிகுந்த—'ஏவல்'தொழிலைமேற்கொண்டு தகாதகாரியங்களைச்செய்த அக்காலச்சைவக்கூட்டமேஇக்கொடுமையைத்துணிந்து செய்து, பின்னர், அக்குற்றத்தைச் சமணர்களால் ஏற்றிப், பாண்டியனையும் ஏனையோரையும் சூழ்ச்சியால் தம்வழி திருப்பிச் சைவத்தை நிலைநாட்டினர் என்பதும் விளங்கும். ஆகையால் தீயிட்ட திருவிளையாடலை இவ்வளவில் நிறுத்தி, அடுத்த கட்டுரையில், நெருப்பில் இட்ட ஏடு வெந்து சாம்பலாகாமல் பச்சென்றிருந்ததுபற்றியும், ஆற்றில் விட்ட ஏடு எதிர் சென்றதுபற்றியும் அவற்றிற்கு அக்காலச்சைவமெய்யன்பராய் சம்பந்தர் கையாண்ட முறைகள்பற்றியும் சமணப் பெருமக்களைக் கழுவில் ஏற்றிக் கொலைபுரிந்த கொடுமைபற்றியும் ஆராய்வாம்.

★

'செல்வி'

பல சிறந்த எழுத்தாளர் களின் சமூகசீர் திருத்தக்கட்டுரை—கதை—கவிதைகளுடன் வெளிவரும் மாதப் பத்திரிகை.

வருடச்சந்தா ரூ 3. பிரதி 4 அணா

எல்லா ஊர்களிலும், ஏஜண்டுகள் தேவை,

விபரங்களுக்கு:—மானேஜர்', செல்வி காரியாலயம். நாகர்கோவில்

(தென்திருவிதாங்கூர்)

படத்திறப்புவிழா

29—9—46-ம்தேதியன்று வாணியம்பாடி முனிசிபல் வைஸ்சேர்மன் தோழர்வி. எஸ். விஸ்வநாதன் அவர்களின் உருவப்படத்தை, சென்னை டாக்டர் கிருஷ்ணசாமி முனிசிபல் கட்டிடத்தில்திறந்துவைத்தார். விழாவிற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

•

மலாய்நாட்டில் திராவிடர் கழகம்

மலாய் நாட்டில் திராவிடர் கழகம் துவக்கப்பட்டிருக்கிறது.

கழகமுகவரி:—

1609, சொான்ரோடு.

கோலாலம்பூர்.

திருவிளையாடல்

3-ம் பக்கத் தொடர்ச்சி

என்பது உண்மையானால், சமணர்கள், கையில் தீக்கோல் கொண்டு சுட்டதுமட்டும் எப்படி அந்தச் 'சிவ' மடத்தைப் பொசுக்கிற்றே? நெருப்பைப் பொய்கைபோலக் குளிரும்படி செய்யும் அருளாற்றல் பெற்ற சிவ மெய்யன்பராம் சம்பந்தர் அங்கிருக்கும்போது, சமணர்களால் இடப்பெற்ற 'கைநெருப்பு' மட்டும் தன்னுடையவேலையைச்சரிவரச்செய்ததுஎன்பதை எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? ஒரு விநாடியிலேயேதிரிபுரங்களையும் சுட்டெரிக்கவல்ல நெருப்பைத்தன்னுடையநெற்றிக் கண்ணுக்குள்ளேயே வைத்திருப்பதாகச்சொல்லப்படும் சிவன், தன்னுடைய அடியவரான—திருவிறக்க (அவதார)மான சம்பந்தரின் மடத்தில் தீப்பற்ற விட்டகாரணம் என்ன? ஏன் அதை அவர்தடுக்கவில்லை? மடத்தில்தீப்பற்றும்போதுசிவன்வேறு வேலையில் இருந்ததால் அதைக் கவனிக்கவில்லை யென்றாலும், அடியவர்களின் அலறல்கேட்ட பின்னாவது, தீயை அணையும்படி செய்திருக்கலாமே! அதுவும் செய்யவில்லையே! மடத்தில் படுத்திருந்த அடியவர்களன்றோ தீயை அணைத்ததாகச்சேக்கிழார் கூறுகின்றார்;

> "...........மறுகிப், பரிசனத் தவர்பதைப்பொடுஞ்சிதைத்தது நீக்கி"

என்பது சேக்கிழார் வாக்கு. அதாவது சமணர்கள், மடத்திற்கு நெருப்பிட்டதை அறிந்த சிவனடியார்கள், அங்கும் இங்கும் ஓடி அலைந்து — சுழன்று நெருப்பை அணைத்தார்கள் என்பதே இதன் பொருள். சிவப் பெருந்தகையின் திருவருள்போலும், நெருப்பணைக்கவல்ல (Fire Fighters) சிவனடியார்கள் சிலரைச் சம்பந்தருடன் இருக்கும்படி செய்தது! இல்லையேல் சம்பந்தர் வெந்து சாம்பலாகி இருப்பார். எப்படியென்றால், மடத்தில்தீப்பற்றியசெய்தி அடியவர்கள் சொல்லித்தான் சம்பந்தருக்குத் தெரிந்ததென்று சேக்கிழாரே கூறியுள்ளார்,

> "கழுமலபதிக் கற்பகக்கன்றைத் தொழுது நின்று அமண் குண்டர் செய்தீங்கினைச்சொன்ன,பொழுது"

அப்படியா?

> "மாதவர் துயிலும் இத்திரு மடப்புறம்பு, பழுத செய்வதோ! பாவிகாள்!"

என்று சம்பந்தர்கூறியதாகச் சேக்கிழாரே பாடியுள்ளார். எனவே, சம்பந்தர் தப்பியது தம்பிரான் (சிவன்) புண்ணியந்தான்! இதுகிடக்க.

இனிப், பாண்டியனுக்கு வெப்புநோய் ஏற்பட்டுவிட்டதென்பதை அறிந்த மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பாண்டியனை அடைந்து,மணி—மந்திர—அவுடத முறைகளை முறை முறையாகச் செய்தனர்; நோய்நீங்கவில்லை;நோய்முன்னினும் அதிகமாகமுறுகிஎழுந்ததுஎன்றும்சொல்லப்படுகின்றது.'பாவிகளான' சமணர்களின் மந்திரம் தான் பலிக்கவில்லை யென்றால், புண்ணியவான்களான குலச்சிறை — மங்கையர்க்கரசி ஆகியோரின் மணி—மந்திர—அவுடதம் எதுவுமே மன்னனின் நோயைநீக்கமுடியவில்லைஎன்று சேக்கிழார் கூறுவது 'சைவ முறைப்படி' பெரிதும் வருந்தத்தக்கது—வெட்கப்படக்கூடியது. மதுரை, சமணமயமாக மாறிய போது, மங்கையர்க்கரசி—குலச்சிறை ஆகிய இருவருமன்றோ சைவத்தின்உயிர்நாடியைக்கையில் பிடித்து வைத்துக்காப்பாற்றிக் கொண்டிருந்தவர்கள்! இப்படிப்பட்ட 'அப்பழுக்கற்ற'சைவ மெய்யன்பர்களால் கொடுக்கப் பட்ட மணி — மந்திர — அவுடதங்கள் எதுவும் மன்னனுடைய நோயைப்போக்க முடியவில்லையா! ஏன் இந்த நிலை ஏற்பட்டது? அவர்களின்சைவப்பற்றில் ஏதேனும் இழுக்கா; இருக்க முடியாதே! அவர்களுடைய சைவப்பெரும்பற்றையும் அதனை அவர்கள் உறுதியாகப்பிடித்துக் கொண்டிருக்கும் உரத்தையும் பாராட்டிச் சம்பந்தரே பாடியிருக்கும்போது, அவர்களது சைவப்பற்றில் குற்றம் இருக்க இடமில்லை. பின்,ஒருக்கால்அவர்களால் கொடுக்கப்பட்ட மணி—மந்திர — அவுடதங்களில் ஏதேனும் பழுதுண்டோ என்றுஎண்ணுவதற்கும் சேக்கிழார் இடந்தரவில்லை.

> "மருத்து நூலவர் தங்கள் பல்கலைகளில் வகுத்த, தொழில் யாவையுஞ் செய்யவும் மேன்மேல், உருத்தெழுந்த வெப்பு"

என்று சேக்கிழார் கூறியிருப்பதால், மணி—மந்திர — அவுடதங்களில், யாதோ கோளாறு இருந்தது, அதனால்தான் நோய் நீங்கவில்லை என்று சொல்வதற்கும் இல்லையே! ஒருக்கால், நோயறிந்து மருந்துகொடுத்த மருத்துவர்பால் இக்குற்றத்தை ஏற்றலாமோ என்றால், மருத்துவர்களைப்பற்றிச் சேக்கிழார்கூறியிருப்பதைப் பார்க்கும்போது, அவர்கள் மருத்துவத் துறையில் பல்கலை பயின்ற நிபுணர்கள் என்றே சொல்லப்பட்டுள்ளது. ஒருவேளை, பாண்டியனுக்குஏற்பட்ட வெப்புநோய் எதனால்—எப்படி உண்டாயிற்று என்பதை அந்த மருத்துவர்களால் கண்டறிந்து கூறமுடியவில்லை என்று கொள்வதானால், இங்கும் சேக்கிழார் தமிழ்மருத்துவர்களை இழிவுபடுத்துவதையே தம் தொழிலாகக்கொண்டவர் என்பதைத் தவிர, வேறுசமாதானம் எதுவும் கூறுவதற்கில்லை— கூறவும்முடியாது. பாண்டியனுக்கேற்பட்ட நோயை அறிந்து மருந்து கொடுக்க வந்த மருத்துவர்கள், அவன் உடம்பைச் சோதித்து, நோய்க்கு மூலம் இது, என்றுசொல்லமுடியாமற் போனார்கள் என்றால், அவர்களைப்பல்கலை தெரிந்த மருத்துவர்கள் என்றுகூறுவது பொருந்தாதன்றோ! பாண்டியனுக்கேற்பட்ட நோய் உடற்கோளாறினால்ஏற்பட்டதா? வேறு, ஏவலினால் ஏற்பட்டதாஎன்பதைக்கூட அறியமுடியாதமருத்துவர்க்குப் "பல்கலை தெரிந்த மருத்துவர்' என்ற பட்டத்தைக் கொடுப்பதும், பின், அவர்களால் கொடுக்கப்பட்ட மருந்தினால் நோய்தீரவில்லை என்றுகூறுவதும்,மருத்துவர் குலத்திற்கே ஒருஇழிவை உண்டாக்குவதற்காகஅங்ஙனம் கூறப்பட்டதே என்று பொருள் கொள்ளாமல், வேறு எந்தவகையில் இதற்குத்தணிவு (சமாதானம்) கூறலாம் என்பதற்குச் சேக்கிழாரைக் காரணமின்றித் தாக்குவதாக எம்மீது குற்றஞ் சாட்டும் அன்பர்கள்தான்விடை கூறவேண்டும்.

இனி ஒருவனுக்கு நோய் உண்டாவதென்றால், அவனுடைய உடற்கோளாறினால் ஏற்படுமேயன்றி, யாதாயினும் ஒரு ஏவலினாலோ அல்லது வேறு சூழ்ச்சிகளினாலோ ஒருவனுக்கு நோய் ஏற்படுவதில்லை என்பதை நன்குணர்ந்ததால்தான், பாண்டியனுக்கு ஏற்பட்டதாகச்சொல்லப்படும் வெப்புநோயை நீக்க வந்த மருத்துவர்கள் அவ்வெப்பு நோய்க்கு ஏற்ற மருந்தைக் கொடுத்தார்கள் என்று கொள்ளலாமே தவிர ,வேறு விதமாகக் கொள்வதற்கு யாதும் இல்லை என்று ஒழிக.

இனிப், பாண்டியனுக்கேற்பட்ட வெப்புநோய்சம்பந்தரின் ஏவலினால் உண்டானதென்று கூறுவதன்வாயிலாகச்சேக்கிழார் மிகவும் இழிவான மூடப் பழக்க வழக்கங்களைத் தமிழ் நாட்டில் உண்டாக்கி வைத்த குற்றத்திற்கும் ஆளாகிறார். எப்படியென்றால், சமணர்கள் சம்பந்தர் தங்கியிருந்த மடத்தைப் பொசுக்குவதற்கு இடப்பட்டதாகச்சொல்லப்படும் தீயைச், சம்பந்தர் பாண்டியன்பால் ஏவிவிட்டார் என்று சொல்லப்படுகிறது. நல்லவேளையாக, இந்த "ஏவல்" வேலையை ஒருதமிழன் செய்தான் என்று சொல்லாமல், ஒருபார்ப்பனன்செய்தான்என்று சொன்னரே சேக்கிழார், அது வரைக்கும் அவருக்கு எமது நன்றி! என்றாலும், சம்பந்தரால் கையாளப்பட்ட இந்த 'ஏவல்' தொழிலை இன்றும்பலதமிழ்மக்கள் தங்கள் தொழிலாக வைத்து நாட்டில் மூடப்பழக்க வழக்கங்களைப்பரப்பி வருவது கண்கூடு. ஏவல்—பில்லி — சூனியம் —பேய்—பிசாசு என்று பலவிதமான, பயனற்ற—பொருளற்ற கொடியதொழில்களை நம்மவரிற் பலர் கற்றுக்கொண்டு, மக்களை அறியாமைக்கும் மூடப்பழக்க வழக்கங்களுக்கும் ஆளாக்கி, அதனால் பொருள் அழிவையும் மானக்கேட்டையும்உண்டாக்கி வருகின்றனர். இவற்றிற்குக்காரணம், பெரிய புராணம்போன்ற சமயநூல்களும் அவற்றின் மூலவர்களானபார்ப்பனருமேதான் என்று நாம் ஆராய்ந்து கூறினால் நம்மை மதத்தின் பகைவன்—பார்ப்பன விரோதி என்றெல்லாம் நாக்கடிக்கப்பேசுகின்றனர். ஏவல்—பில்லி—சூனியம் முதலிய மனித அறிவுக்கும்—தேவைக்கும் பொருந்தாத — வேண்டப்படாத மூடப்பழக்க வழக்கங்களை மக்கட்குப் புகுத்தும் ஒரு நூலுக்குப் பெயர் பெரியபுராணமாம்! அதனை மக்கள் பக்தி சிரத்தையுடன்படிக்க வேண்டுமாம்! குறைகூறக்கூடாதாம்! என்னே, இவர்தம்அறியாமை!!

இனி, இத்தகைய உண்மைகளை நாம் ஆராய்ந்து கூறும் போது, சிலர், 'இல்லாத குற்றத்தை ஒரு நூலின் மேலேற்றி, அந்தக் குற்றத்துக்காக அந்த நூலை ஒழித்திடவேண்டு'மென்று கூறுவதாக எம்மீது குற்றம் சுமத்துகின்றனர். ஒரு நூலில் இல்லாத குற்றம், அதனைப்படிக்கும்போது எப்படி உண்டாகும் என்பது எமக்கே தெரியவில்லை. எடுத்துக் காட்டாக, ஏவல்—பில்லி—சூனியம் முதலியனவற்றைச் சைவ மெய்யன்பர்களோ அல்லது வேறு சமய மெய்யன்பர்களோ ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவை நாட்டில் நடைமுறையில் இருப்பதையும் விரும்பார்கள். அவற்றை உண்மையை யென்றும் நம்பார்கள். அவற்றால் மக்களுக்குக் கெடுதலேயன்றிநன்மை யாதும் இல்லை என்பதையும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால்,அவர்களால் போற்றிப் பேணப்படும் பெரிய புராணத்தில் ஏவல் தொழில்முறை கற்பிக்கப்பட்டிருக்கிறதே — தேவாரம் அந்த ஏவல்தொழிலுக்கு மந்திரமாக அமைந்திருக்கிறதே! என்று கூறுபவர்களா இல்லாததை வலிந்து புகுத்தி ஒன்றின்மீது குற்றம் சுமத்துபவர்கள்? சம்பந்தர், தம்பால் வந்த தீயைப், பாண்டிடியன் பால் ஏவினர் என்றசெய்தியைப் படிக்கும்போதே ,ஏவலும் அதனையொட்டிய'பில்லி—சூனியம்—பேய்—பிசாசுஆகிய எல்லாமே நினைவுக்கு வந்துவிடுகின்றனவே! ஒரு நிகழ்ச்சியைப் புராணத்தில் படிக்கும்போது, அதிலும் புராணங்களிலுள்ளவற்றை ஆராய்ச்சியுணர்வோடு படிக்கும் போது, அந்நிகழ்ச்சியை ஒட்டிய—தழுவிய பல நிகழ்ச்சிகள், படிப்பவனுடைய நினைவுக்கு வராமல் இருக்கமுடியுமா? அங்ஙனம் வரும்படிபடிப்பதுதவறா? அன்றிவருவனவற்றை மறைப்பது முறையா? என்பனவற்றிற்குச் சைவமெய்யன்பர்கள் தான் விடைகூறவேண்டும். அங்ஙனமன்றி, ஒரு நாயைக் கொல்லவிரும்பும் ஒருவன், அதற்குக் கெட்ட பெயரை வேண்டுமென்றே உண்டாக்கி அதனைத் தூக்கிலிட்டுக்கொல்லுவது போன்ற முறையை ஒரு நடுநிலை ஆராய்ச்சியாளன் எப்பொழு

(5-ம் பக்கம் பார்க்க)

தீயிட்ட திருவிளையாடல்!

★

(நக்கீரன்)

மதுரைக்குச் சம்பந்தர் கூட்டம் வந்த செய்தியைச் சமணர்களால் அறிந்த பாண்டியன், "அவர்கள் யார்? ஏன் இங்கு வந்தார்கள்?" என்று சமணர்களைக் கேட்டதாகவும், அதற்கவர்கள், "ஒரு பார்ப்பனச்சிறுவன்—சீர்காழியிற் பிறந்தவனும்—சூலபாணியின் அருள்பெற்றவனும் — எங்களை வாதில் வெல்லப்போகிறானும்' என்று சொன்னதாகவும், அதுகேட்ட அரசன், 'இதற்குஎன்செய்வது' என்றுசமணர்களைக்கேட்டதாகவும், சமணர்கள், "அச்சிறுவனை வலிந்து துரத்துதல் கூடாது; அவன் உள்ள மடத்தில் மந்திரத்தால் தீயிட்டால், அவன்தானே ஓடிவிடுவான்" என்றுசொன்னதாகவும், அரசனும் அதற்கு உடன்பட்டதாகவும் சொல்லப்படும் ஒருபகுதி சம்பந்தர் வரலாற்றில் காணப்படுகிறது.

இந்நிகழ்ச்சி, சிறிதளவு அறிவுடையாராலும் எள்ளி நகையாடப்பட்டுத் தள்ளப்படுமேயன்றி, உண்மையென ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. அதிலும் இங்கு பேசப்படும் அரசன், சமணர்களின் இம்முடிவுக்கு ஒப்புக்கொண்டே, மந்திரத்தீமூட்ட உடன்பட்டான்என்பது தினைத்துணையும் நம்பமுடியாத ஒரு செய்தியாகும். எப்படியென்றால், இங்கு பேசப்படும் அரசன், முன்னர் சைவ சமயத்தைச் சார்ந்திருந்தவனென்றும், சமணர்கள், தங்கள் சமயஉண்மைகளையும், சைவ சமயப் பொய்ம்மைகளை அரசனுக்கு விளக்கிக்கூற, அவ்விளக்கத்தால் தெளிவுபெற்ற அரசன், பின்னர் சைவத்தைக் கைவிட்டுச் சமணத்தை மேற்கொண்டான்என்றும் சொல்லப்படுகிறது. இந்நிலையில், ஒருசமயத்தைப் 'பொய்' என்று கைவிட்டு இன்னொருசமயத்தை 'மெய்' என்று ஒப்புக்கொண்டு, ஒப்புக்கொண்ட அச்சமயவழி நிற்கும் ஒருவன், அதிலும் அச்சமயத்தைஒப்புக்கொள்ளும்படிசெய்தசமயாசிரியர்கள் (சமணர்கள்) தன்னுடன்இருக்கும்போது, சம்பந்தரின் மடத்திற்குத்தீயிடுவதே முறை என்ற முட்டாள்தனமான முடிவை ஒருபோதும் ஒப்புக்கொண்டிருக்கவேமாட்டான். ஒன்றைப் பொய் என்றும் இன்னொன்றை மெய் என்றும் உணர்ந்த ஒருவன், அதிலும்சமயங்கள்பற்றிய மெய் பொய்களை அந்தந்தச்சமய நூல்களையும் சமய ஆசிரியர்களையும் துணையாகக்கொண்டு ஆராய்ந்து உணர்ந்து ஒருமுடிவுக்கு வந்த ஒருவன், 'அதைவிட இது மேல்' என்ற நம்பிக்கையைக் கொண்ட ஒருவன், தன்னுடைய கொள்கையை மெய்ப்பித்துநிலைநாட்டுவதற்குக் 'கையாலாகாதவன்'போல் இத்தகைய இழிசெயலைச் செய்யமுற்பட்டவர்களுக்கு உடந்தையாய் இருந்தான் என்று கூறுவது ஒரு மன்னனின் நிலைமைக்கு ஏற்புடைத்தென்று எவருமே ஒப்புக்கொள்ளமாட்டார்.

சம்பந்தர், சமணர்களோடு வாதிட்டு அவர்களை வெல்லவந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டதும், அம்மன்னன், சமணர்களை நோக்கிச்,

"சம்பந்தனா?
சைவனா?
சூலபாணியின் அருள் பெற்றவனா?
சின்னப்பையனா?

இவனை வாதில் வெல்வதாஉங்கட்கு முடியாதகாரியம்! நன்று சொன்னீர்கள்! வந்தவனோடு வாதிட்டு அவன் வாயைஅடக்கி வந்தவழியே திரும்பி ஓடும்படி செய்வதைவிட்டு, அவன் தங்கி இருக்கும் மடத்திற்குத் தீ இடுவதா? இதனைப் பிறர்கேட்டால் எள்ளிநகையாடாரோ! கையாலாகாத்தனம் என்று கழறாரோ! வந்தவனோடு வகையாகப்பேசத் தெரியாதவர்கள் —பேசும் திறமையற்றவர்கள் அவன் தங்கியிருந்த வீட்டுக்குத் தீ வைத்தார்கள் — தீயசெயலைப் புரிவோர்; இதற்கு அந்நாட்டு மன்னனும் உடந்தையாக இருந்தானாமே! நன்று நன்று இவர்கள்செய்கை என்றன்றோ இதனைக்கேள்விப்படுவோர் ஏளனம் செய்வர்; இங்ஙனம் செய்வது நும்மைமட்டும் அன்று, எம்மையுமன்றோ இழிவுபடுத்தும்! ஒரு மன்னன் தன் நாட்டுக்குவந்த ஒருவனைக் கேள்விகேட்பாடின்றித் தீயிட்டுக்கொளுத்தினானாம்! இவனும் ஒரு மன்னனாம்! மன்பதையைக் காப்பவனாம்! அதிலும், வந்தவன் இவன்போன்று ஒரு நாட்டுக்கு அரசனும் அல்லவே! இவனோடு போர் தொடுத்து இவனுடைய நாட்டைக்கைப்பற்ற வந்தவனுமல்லவே! அப்படி வந்தாலும், வந்த மன்னனோடு இந்த மன்னனும் போரிட்டு வெற்றிதோல்வி காண்பது முறையேயன்றி, வந்த மன்னனை, அவன் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று, யாரும் அறியாமல் தீயிட்டுக் கொல்வது இறைமாட்சிக்கு ஏற்றதல்லவே! இது போன்ற கொடுமை, எந்தக் கொடுங்கோலாட்சி செலுத்தும் நாட்டிலும் நடைபெறாதே! இவனோ, வந்தவிருந்தினரை வரவேற்று, இனி வர இருக்கும் விருந்தினரை எதிர்நோக்கி நிற்கும் மரபில் வந்தவனாயிற்றே! இவனா இப்படிச் செய்தான்? ஒருவன், தனக்குப்பிறவி எதிரியாக இருந்தபோதிலும், அவன் தன்னைநாடிவந்துவிட்டால், வந்தவனைத்தன் எதிரி யென்றும்எண்ணாது — ஏளனமும் செய்யாது வரவேற்று மகிழ்விக்கும் மரபில் பிறந்த இவனா இத்தகையகொடுமையைச் செய்தான்? என்று எம்மை உலகம் ஏளனஞ்செய்து இழிவுபடுத்தும்; ஆகையால் உங்கள் கருத்தை நான் ஒப்புக்கொள்ளமுடியாது. நீங்களோ, கொல்லாமையை எல்லார்க்கும் சொல்லும் நல்லவர்கள் — நீங்களா இக்கொலை பாதகத்திற்கு ஆளாவது! கூடாது! கூடாது!!

நாங்கள் சமணர்கள்!
அருகனின் அருள் பெற்றவர்கள்!
அறிவை அரணாகக்கொள்பவர்கள்!
ஆண்டில் மட்டுமன்று
அறிவிலும் பெரியவர்கள்!

இப்படிப்பட்ட எங்களோடு வாதிட்டு வெல்லும் திறமை உனக்கில்லை என்பதை நாங்கள் நன்றாக உணர்கின்றோம்; ஆயினும், வந்தவர்களை நெறிமுறையின்றி இழிவுபடுத்தும் இயல்பு எங்கட்கில்லையாதலால், உன்னைச் சிறியவனென்று சிறுமைப்படுத்தாது வரவேற்கின்றோம்—வாதாடவும் தயாராக உள்ளோம் என்று சம்பந்தருக்குச் சொல்லியனுப்புங்கள்" எனபதாக அம்மன்னன் சமணர்களுக்குக்கூறியிருக்கவேண்டும்; அதுவேமுறை.

ஆனால், கதை அப்படி அமையவில்லை. சம்பந்தர் தங்கியிருந்த மடத்தைத் தீயிட்டுக்கொளுத்துவதேமுறையென்ற சமணர்கள் கூறியதற்கு அம்மன்னனும் உடந்தையாகஇருந்தான்என்றே கதையிற் கூறப்பட்டுள்ளது. அதாவது:—

"..
..............சிறுமறையோன்
உறைமடத்தில், வெந்தழற்பட விஞ்சை மந்திரத்தொழில் விளைத்தால்,
இந்த நன்னகரிடத்திரான்
ஏகும் என்று இசைந்தார்"

என்றுசமணர்கள்கூற, அதற்கு,

"ஆவதொன்றிதுவேயாகில் அதனையே விரைந்து
செய்யப், போவதென்றவரைப்போக்கி................"

என்று மன்னன் கூறியதாகச் சேக்கிழார் பாடியுள்ளார். எனவே, மன்னனும் இக்கொடுமைக்கு உடந்தையாகவே இருந்தான் என்பது, சேக்கிழாரின் பாடல்களில் இருந்துதெரியவருகிறது.

இனி, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி, 'இவை தமிழ்மக்களை இழிவுபடுத்துவதற்காக வேண்டுமென்றே பாடப்பட்டன' என்று நாம் கூறினால், நம்மீது சீறி விழுகின்றனர் சிலர். கூறப்படும் கருத்துக்களை எண்ணிப் பார்ப்பதற்குக்கூட நேரமில்லாமல், சேக்கிழார் என்ற சொல்லைச் செவிமடுத்தவுடனே — கம்பர் என்ற சொல் காதில் பட்டவுடனே, சேக்கிழாரைச் சிறுமைப்படுத்துவதா? கம்பரைக் காய்வதா? என்றெல்லாம் எம்மீது சரந்தொடுக்க முற்பட்டு விடுகின்றனரேயல்லாமல், அவர்களால் கூறப்பட்டவை காலத்திற்கும் கருத்திற்கும் ஒவ்வாதவை என்று நாம் எடுத்துக்காட்டும் ஆய்வுகளை ஆர அமர இருந்து முடிவு செய்வதில்லை. எதனையும் எண்ணிப்பார்த்து முடிவுகட்டும் இயல்பு நம்மவர்க்கு உண்டாக வேண்டுமென்பதற்காகவேதான் இத்தகைய ஆராய்ச்சிகளை நாம் அடிக்கடி எழுதி வருகின்றோம் என்பதனைக்கூட அவர்களால் உணரமுடிவதில்லை.

சம்பந்தர் மதுரைக்கு வந்தார்! ஏன்வந்தார்?
சமணர்களோடு வாது செய்ய! இதனைஅறிந்தனர்
சமணர்! மன்னனிடம்கூறினர்! என்னகூறினர்!
சம்பந்தர் தங்கியிருக்கும் மடத்தில் தீயிடவேண்டுமென்றனர்! மன்னன்
அதற்கு மறுசொல் கூறாமல் இசைந்தான்!

சண்டைக்கு வந்தவனோடு சண்டையிடுவது; அல்லதுமுடியாது, வந்தவனிடம் படைபலம் மிகுதி யென்றால் சமாதானம் பேசுவது அல்லதுசரணடைவது, அல்லது வந்தவன் எப்படிப்பட்ட பலம் பொருந்தியவனாயினும், அவனுடன் சமாதானம் பேசுவதோ, சரணடைவதோ கூடாதென்று நினைப்பவன் அவனோடு போரிட்டு மடிவான்; இப்படித்தானே ஒரு மன்னன் நடந்து கொள்வான் — நடந்து கொள்கிறான். இதுபோலவே, வாதிட வந்தவனோடு தாமும் வாதிடுவதே முறை; வாதிடும் வல்லமை இல்லை யென்றால், வந்தவனோடு வகையாகப் பேசி அனுப்பி விடவேண்டும்; அல்லது வாதிட்டுத்தோல்வியடைய வேண்டும். இங்ஙனமன்றி, வாதிட வந்தவனை நெறிதவறிய முறையில் நெருப்பிட்டுப் பொசுக்குவதும், அதற்கு அம்மன்னனின் உடன்பாடுகிடைத்ததாம்! ஒருமன்னன், அவன் எப்படிப்பட்டவனாயினும் இக்காரியம் செய்யஇசைந்திருப்பானா என்பதையாவது எண்ணிப் பார்க்கவேண்டாமா?

இனி, இங்ஙனம் வாதிடவந்த ஒருவனைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டுமென்று எவரேனும் கூறினால், அதனைக் கேட்டவன் என்ன நினைந்திருப்பான்! "வாதிட்டு வெல்லும் திறமை இவர்கட்கு இல்லைபோலும்! அதனாலேதான் இவர்கள் அவனை நெருப்பிட்டுப் பொசுக்க வேண்டுமென்கிறார்கள். இவர்களுடைய சமயமும் சமயக்கோட்பாடுகளும் வாதிடவந்தவனுடைய சமயத்தையும் சமயக்கோட்பாடுகளையும் விடஎந்தவிதத்திலும் மேம்பாடுடையதன்று" என்றுதானே நினைத்திருப்பான். நினைப்பது மட்டுமல்ல, உடனே அந்தச் சமயத்தையும் சமயக்கோட்பாடுகளையும் கைவிட்டிருப்பான். ஆனால் இங்கு பேசப்படும் மன்னன்,

'ஆவதொன்றிதுவேயாகில்
அதனையே விரைந்து
செய்ய"

3-பக்கம் பார்க்கவும்

நியூரம்பர்க்

1-ம் பக்கம் தொடர்ச்சி

காரணமாக இருந்த போர்மூட்டியவர்களின் கதியைக்கண்டு, சிரிக்காவிட்டாலும் சிந்திப்பார்கள். ஒரு சிலரின் கண்களிலே நீர் கசியக்கூடும். ஏனெனில் தண்டிக்கப்பட்டவர்களெல்லாம், ஜெர்மன்மக்களின் மனதை ஒருகாலத்தில் கொள்ளை கொண்டவர்கள். உலகிலே அவர்களுக்கு ஈடு இணை இல்லை; எவராலும் அவர்களை வெல்லமுடியாது என்று அந்தமக்கள்எண்ணினர். பெர்லினுக்குள், சோவியத் குண்டு விழுந்தபிறகுதான், அவர்களின் மனம் உடைந்தது. பிடிபட்ட ஜெர்மன் நகர்களிலிருந்து ஜெர்மன் மக்கள் கும்

2-ம் காலம் பார்க்க

பல் கும்பலாக வெளியேறினர். அங்ஙனம் வெளியேறியபோதுதான், எந்தத்தலைவர்களின் திறமையில் அவர்கள் "தெய்வீகசக்தி" இருப்பதாகக்கருதி வந்தனரோ, அந்தத்தலைவர்கள் நாட்டுமக்களுக்கு, நம்பிக்கை மதுஊட்டி மயங்கவைத்தவர்கள், என்பதை உணர்ந்தனர்—தலைவர்களை நம்பினோம் தவிக்கிறோம் என்று தங்களைத்தாங்களே நிந்தித்துக்கொண்டனர். திகைத்து அந்தமக்கள் தெருவில் அலைந்த அன்றே அவர்கள் தீர்ப்பளித்துவிட்டனர், தலைவர்கள் தமது வீரதீரப்பிரதாபத்தை வளர்த்துக்கொள்வதற்காக ஒரு நாட்டையே பாழ்படுத்திவிட்டனர் என்று. வெற்றிப்பவனிகளை, நாஜி ஊர்வலங்களை ஹிட்லர் படைவரிசையின் அணிவகுப்புகளைக்கண்ட ஜெர்மன் மக்கள், கும்பல் கும்பலாக, வீடிழந்துவாசலிழந்துசோற்றுக்கு அலைந்தனர்.

அலைந்தபோது அற்புதமான சக்தி பெற்றவர்கள் என்று எந்தெந்தத்தலைவர்களை நம்பியிருந்தார்களோ அவர்களை ஜெர்மன் மக்களே சபித்தனர்.

அலைந்தனர்

நாட்டு மக்களின்மனதிலே நம்பிக்கையும்ஆசையும்,பக்தியும் கூட எழும்படி செய்யமுடியும், பலமான, முறையான, திறமையான பிரச்சாரத்தால். தலைவர்களைக் கண்கண்ட தெய்வங்களாக்கிக்காட்டமுடியும்! தேவனருள் பெற்றவர்களாக்கிக் காட்டமுடியும்! பிரச்சாரம்எந்த அளவுக்கு வெற்றி அளிக்கமுடியும் என்பதை நாஜிகள் செய்து காட்டினர். கோயிலிலே கூட்டம் இராது. நாஜி கொலு மண்டபம் ஜனத்திரள் மயமாக இருக்கும்! பாதிரிகளுக்குச் சீடர்கள் கிடைக்கமாட்டார்கள். நாஜி பட்டாளத்தில் சேருவது வாலிபனுக்குப் பிறவியின் பெரும்பேறாகத் தோன்றிற்று. திருவிழா ஹிட்லருக்குத்தான்! புலவர்களின் பேனா, ஹிட்லருக்கே அர்ப்பணம்! இசை, நாடகம், சினிமா, ரேடியோ பத்திரிகை, பள்ளிக்கூடம், ஓட்டல், எங்கும் பிரச்சாரம்-பிரச்சாரம், ஓயாதபிரச்சாரம், ஒரேவகையான பிரச்சாரம், ஹிட்லர் தேவகுமாரன், ஜெர்மனியின் புனருத்தாரண கர்த்தா, மகாஜெர்மன் சாம்ராஜ்யாதிபதி என்பது பற்றியே நடந்தது. இந்த 'ஒப்பற்றநிலை'யைப் பெறமுடிந்தது பிரச்சாரத்தால். ஆனால்,.............................நியூரம்பர்க் எச்சரிக்கிறது,

நாட்டுமக்களை ஏமாற்றாதே! பிரச்சாரயந்திரம் நம்மிடம் இருப்பதால் நாம் நினைக்கிறபடி எல்லாம் மக்களை ஆட்டிவைக்கலாம் என்று எண்ணிவிடாதே! வீணாசையையும் நம்பிக்கையையும் ஊட்டாதே. தலைவர்களைத் தேவர்களாக்காதே! தேசியத்தைப்பக்தியாக்காதே!

நாட்டுப்பற்றைப்புதிய மதமாக்கிவிடாதே! நாஜிகளின்வெற்றி, வீழ்ச்சியில் முடிந்தது! பெர்லினில் பவனி! ஆனால் நியூரம்பர்க்கைக் கவனி!!

ஒருநாட்டு மக்களின் அன்பைப்பெறுவது, மகத்தானவெற்றி, ஆனால் அதுமகத்தானபொறுப்புங்கூட! அந்தப்பொறுப்பின்போது மனமயக்கம் ஏற்படின் நியூரம்பர்க்மார்க்கமே போகவேண்டி நேரிடும்.

நாஜிசம், பிரச்சாரபலத்தினால் தலைவர்கள் எவ்வளவு உச்சநிலைபோகமுடியும் என்பதையும், தந்திரமான பிரச்சாரத்துக்குப்பலியாகும் மக்கள் எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கையில் மூழ்கமுடியும்என்பதையும் காட்டும் ஒருபயங்கர உண்மை! நியூரம்பர்க் ஒரு எச்சரிக்கை!!

ஜெயராம் காயசுத்தி லேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம் குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும்

அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2–2–0.
வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

உறையூர்
எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக்கைத்தறி கலர் புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார்செய்யப்பட்டது. உத்தரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
54, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

கிளி மார்க்
பட்டணம் பொடி.

நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.

ஏ.எஸ்.ராஜன் அண்ட் கம்பெனி,
தபால்பெட்டி நெ. 1155.
பழையவண்ணாரப்பேட்டை, சென்னை.

பிறப்பு

காஞ்சிபுரம் தோழர் அ. க. தங்கவேலர் அவர்களின் துணைவி ஆதிலட்சுமி அம்மையாருக்கு 7–10—46-ல் ஒருபெண் மகவு பிறந்து தாயும் சேயும் சுகமே உள்ளனர்.

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.